கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆணையாளரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் திருமதி.T.சசிகலா, M.B.A,M.Phil, P.G.D.C

ந.க.எண். 735/2023/எப் 1 நாள். 31.01.2024

பொருள் : மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் – கோபிசெட்டிபாளையம் நகராட்சி – நகரமைப்பு பிரிவு – வீரபாண்டி கிராமம் வார்டு – B. பிளாக்–23 . T.S.No. – 55/1B இல் – 1531சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL NO.185/2023 என எண்ணிடப்பபட்டு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது

பார்வை :
1 அரசாணை எண் 18 .நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 .மற்றும் அரசாணை எண்16 . நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் . 31.01.2020
2 நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந 2–டிபி/2022/12843.எண்.க.நாள்20.10.2022.
3 ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் இணையவழி கடிதம் ERD/29OLWRM3/2022/TCP நாள்:24.03.2023.
4 இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்05.04.2023 .
5 தானப்பத்திர ஆவண எண்.1368/2023, நாள்.21.04.2023
6 28.04.2023 ஆம் நாளிட்ட மனுதாரர் G. ஜட்சன் விண்ணப்பம்
7 ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் இணையவழி திட்ட அனுமதி ERD/29OLWRM3/2022/TCP நாள்: 09.05.2023
8 இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள் 19.05.2023 . 27.10.2023
9 வட்டாட்சியர், கோபிசெட்டிபாளையம் அவர்களின் உட்பிரிவு பட்டா மாறுதல்உத்தரவு எண்.TR 2023/10/31/000447SD, 000449SD,000450SD , 000451SD, நாள்.31.10.2023, 000452SD ,000453SD,000454SD,,000455SD,நாள்.02.11.2023
10 அரசு பொறியியல் கல்லூரி (IRTT) அறிக்கை எண். IRTT / CE 35 / 2023 / 24 / Test No. 36/800 நாள்.23.11.2023
11 28.11.2023 ஆம் நாளிட்ட பொறியர் பிரிவு குறிப்பு
12 இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்19.12.2023 .
13 21.12.2023 ஆம் நாளிட்ட மனுதாரர் G. ஜட்சன் விண்ணப்பம்
14 இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்27.12.2023 .
15 29.12.2023 ஆம் நாளிட்ட மனுதாரர் G. ஜட்சன் விண்ணப்பம்
16 நகர்மன்ற தீர்மானம் எண். 767 நாள்,30.01.2024

****

கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மொடச்சூர் கிராமம், வார்டு–B, பிளாக் – 23. T.S.No. – 55/1B இல் – 1531 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 3 இல் காணும் கடிதத்தில் சாலை வரைபட ஒப்புதல் அளித்து மனுதாரருக்கும் அதன் நகல் இவ்வலுவலகத்திற்கும் வரப்பெற்றது.

மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் பொது ஒதுக்கீடுகளை பார்வை 5 இல் கண்டவாறு நகராட்சிக்கும் மற்றும் தமிழ்நாடு மின்வாரிய துறைக்கும் தானமாக தங்களால் ஒப்படைப்பு செய்யப்பட்டது பார்வை 7 இல் கண்டவாறு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/ERODE/LAYOUTAPPROVALNO.185/2023 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் மனைப்பிரிவில் உள்ள மனையிடங்களை தனித்தனியாக உட்பிரிவு செய்தும் மற்றும் பொது ஒதுக்கிடுகளை ஆணையாளர் பெயருக்கு உட்பிரிவு செய்தும் பார்வை 9 இல் கண்டவாறு வட்டாட்சியரின் உத்தரவு வரப்பெற்றது. மேலும், மேற்படி மனைப்பிரிவிற்கான கட்டணங்கள் அனைத்தும் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் உத்தரவின்படியும், பொறியர் பிரிவின் 28.11.2023, ஆம் நாளிட்ட குறிப்புகளின் பேரிலும் பார்வை 16 இல் காணும் தீர்மானத்தில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க நகர்மன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.

எனவே, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலின்படியும், பொறியியர் பிரிவின் குறிப்புகளின் அடிப்படையிலும், பார்வை 10 இல் காணும் அரசு பொறியில் கல்லூரியின் மூன்றாம் நபர் தர சான்றின்படியும் பார்வை 16 இல் காணும் நகர்மன்றத்தீர்மான ஒப்புதலின் பேரிலும் வார்டு–B, பிளாக் – 23. T.S.No. – 55/1B இல் – 1531 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL NO.185/2023 என எண்ணிடப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் மற்றும் கீழ் காணும் சிறப்பு நிபந்தனைக்கு உட்பட்டும் இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை

இம்மனைப்பிரிவில் வடிகால், கழிவு நீர் செல்வது தொடர்பாக பொது பிரச்சனை ஏற்படும் போது மனைப்பிரிவு உரிமையாளரே சொந்த பொறுப்பில் தீர்வு செய்ய வேண்டும். இது நகராட்சியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது.

இணைப்பு

1. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் SWP/DTCP/ERODE/LAYOUTAPPROVALNO.185/2023 மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்.

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி.

பெறுநர்
திரு. G. ஜட்சன்,
த/பெ. ஞானதுரை,
14A. காளியண்ணன் வீதி,
கோபிசெட்டிபாளையம்.

நகல்

1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்.ஈரோடு ,
2. தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம், சென்னை.
3. 1ம் எண் இணை சார்பதிவாளர், கோபிசெட்டிபாளையம்
4. வட்டாட்சியர், கோபிசெட்டிபாளையம்.
5. நகராட்சி பொறியாளர்
6. வருவாய் ஆய்வாளர் (காலியிட வரி நிர்ணயம் செய்ய)